வேண்டுமென்று ஒரு மையக் கருத்தாக வைத்திருக்கிறோம். அதற்கு முன்னுதாரணமாக, நான் குறிப்பிட்டுள்ள சாலைகளை எடுத்தால் நலமாக இருக்கும். எனவே, இதைப்பற்றி மறு பரிசீலனை செய்து, இந்தத் தேசியமயமாக்கப்பட்ட சாலைகளில் அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படிப்பட்ட சாலைகளில் நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அது போக, எப்படியாவது தனியார் போக்குவரத்துக்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை என்று கருதுகிறேன். இதிலே, தன்னிறைவு ஏற்பட்டதற்குப் பிறகு, அவைகளும் எடுத்துக் கொள்ளப்படும். அதைப்பற்றி கவலை வேண்டாம் என்பதை மறுபடியும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு விமானப் போக்குவரத்துக் கழகம்.

*வினா எண் 467—திரு. சு. முத்துகிருஷ்ணன் திரு. இல. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இதன் மூலம் தமிழகத்தில் எந்த எந்த இடங்கள் சுற்றுலாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(இ) 1976-க்கு முன்பு விமானப் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா?

(ஈ) ஆம் எனில், அதன் முடிவு யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் என தனி அமைப்பு அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

எனினும், இந்திய விமானப் போக்குவரத்தில் சேராத, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மாவட்டங்களின் தலை நகரங்களை இணைக்கும் குறுகிய விமானப் போக்குவரத்தை நடத்துவதற்கு (Feeder Airlines Service) மைய அரசின் அனுமதி கோரப்பட்டது. மேலும், இதன் தொடர்பாக மூன்றாவது நிலை விமானப் போக்குவரத்து அமைப்பை (Third Level Air Services) மத்தியத் துறைத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மைய அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. மூன்றாவது நிலை விமான போக்குவரத்து அமைப்பை வடகிழக்கு பகுதியில் முதலில் அமைக்க மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது என்றும், மற்ற

1981 மார்ச் 24]

மாநிலங்களில் அத் திட்டத்தை விரிவாக்க தற்சமயம் கருத்துரு ஏதும் இல்லை எனவும், இச்சூழ்நிலையில் இத்தகைய திட்டங்களை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க தற்சமயம் மத்திய அரசால் இயலவில்லை எனவும் மைய அரசு தெரிவித்துள்ளது.

(ஆ), (இ) மற்றும் (ஈ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க அனுமதி கோரி மைய அரசுக்கு வேண்டப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. அப்படி ஆரம்பிக்கின்றபோது, நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற, அதிலும் குறிப்பாக, தஞ்சாவூர், வேலூர் போன்ற இடங்களில் எல்லாம் ஏற்கெனவே விமான தளங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தவில்லை மைய அரசு. இது போன்று சென்னையிலே சோழவரம் என்ற இடத்திலும் விமான தளம் பயன்படுத்தாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த அரசு நல்ல முறையிலே இதற்கான குழுவை அமைத்து, இதை நல்ல முறையிலே பயன்படுத்த, தமிழகத்திலே கன்னியாகுமரி முதல் தொடர்பான அனைத்துப் பகுதிகளிலும் தமிழக அரசின் சார்பாக சிறந்த முறையில் இந்த விமான சர்வீசை சுற்றுலாத் துறையின் மூலமாக அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே அரசாங்கம் அப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்என்பதற்காகத்தான், மத்திய அரசின் அனுமதியைக் கோரி ஏற்கெனவே எழுதியிருக்கிறது. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தையும் அதிலே சேர்த்து மத்திய அரசுக்கு மீண்டும் எழுதலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்காக மத்திய அமைச்சர் ஒருவர் நெல்லை மாவட்டத்திற்கு சுற்றுப் பயணம் வந்து, தூத்துக்குடி-நெல்லை நெரு வழித்தடம், கயத்தாறு போன்ற இடங்களில் விமான தளம் அமைக்கப் பார்வையிட்டுச் சென்றார்கள். அதனுடைய விவரங்கள் என்ன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தவிர, நெல்லை மாவட்டத்திலேயே பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்ற காரணத்தினால், இந்த இடத்தில் ஒரு விமான தளம் அமைக்க மத்திய அரசுக்கு சிபார்சு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்தை நானும் பத்திரிகையிலே பார்த்தேன்: ஆனால் அதிகாரபூர்வமாக

DIIA 30-6

வரவில்லை. என்றாலும், அதைத் தெரிந்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியுமானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தியாவிலே எந்தெந்த மாநிலங்கள் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே விமான சர்வீசுகள் நடத்துகின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? அதுபோல், இந்த விமான தளம் அமைக்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள் சார்பிலே, பல்வேறு கழகங்கள் சார்பிலே ஆலோசனைகள் ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா அல்லது அதற்கான கருத்து அரசால் வேண்டப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் யார், யார் நடத்துகிறார்கள் என்ற விவரம் என்னிடம் இலை. அவ்வாறு அமைப்புகளை யோசனை கேட்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். அரசாங்கமே இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை மனதிலே வைத்திருக்கிறபோது, தேவையென்றால் மற்றவர்களைக் கேட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேக்கல் முடியில் இருந்து துரித பேருந்து.

*வினா எண் 468— திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேக்கல் முடியிலிருந்து வால்பாறை, பொள்ளாச்சி வழியாக மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரிக்கு துரித பேருந்து விடும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY